செய்தி வெளியீடு நாள் : 23.02.2024

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்களும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் அவர்களும் செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரியில் நகர்ப்புற வனம் ஏற்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ரூ.5 கோடி நிதியை வனத்துறைக்கு வழங்கினர்.**

******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (23.02.2024) சென்னை, தலைமைச் செயலகம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் மற்றும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் அவர்கள் ஆகியோர் செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரியில் நகர்ப்புற வனம் ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு பசுமை கால நிலை நிறுவனத்துடன் (TNGCC) இணைந்து, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ரூ.5 கோடி நிதியை வனத்துறைக்கு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹு, இ.ஆ.ப., அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர்/வனத்துறை தலைவர் திரு.சுப்ரத் முகபத்ரா, இ.வ.ப., அவர்கள், முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர் (பசுமை தமிழ்நாடு இயக்கம்) திரு.தீபக் ஸ்ரீவத்சவா, இ.வ.ப., அவர்கள், தலைமை வனப் பாதுகாவலர் (சென்னை மண்டலம்) திருமதி.கௌ.கீதாஞ்சலி, இ.வ.ப., அவர்கள், செங்கல்பட்டு மாவட்ட வன அலுவலர் திரு.ரவி மீனா, இ.வ.ப., அவர்கள், தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி அவர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Verified RealEstate™